TNTP160016232023

Presented on : 05-05-2023
Registered on : 05-05-2023
Decided on : 22-07-2026
Duration : 3 years, 2 months, 17 days

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை : திரு.சு.அருணாச்சலம், B.E, L.L.B.(Hons),
நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.55/2023**

**CNR.No. TNTP16-001623-2023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக: காவல் உதவி ஆய்வாளர், இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.20/2022 |
| | | -எதிர்- |
| எதிரியின் பெயரும், விலாசமும் | : | திருநாவுக்கரசு த.பெ.ஜோதிவேல் வயது 30/22<br>எண்.91 அரிசனா தெரு, பாலையூர், வாலையூர், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம். |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | | 1. ஆபாசமான வார்த்தையால் திட்டுதல் – இதச பிரிவு 294(பி)ன் படி தண்டிக்கத்தக்கது.<br>2. தன்னிச்சையாக ஒருவரை |

| | | |
|---|---|---|
| | | அபாயகரமான ஆயுதத்தால் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்துதல்– இதச பிரிவு 324 ன் படி தண்டிக்கத்தக்கது.<br>3. கொலை மிரட்டல் விடுதல் – இதச பிரிவு 506(1)ன் படி தண்டிக்கத்தக்கது.<br>4. ஒரு பெண்ணை துன்புறுத்துதல் – தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 படி தண்டிக்கத்தக்கது. |
| எதிரியின் பதிலுரைகள் | : | குற்றவாளி இல்லை |
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு 05.05.2023–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I திருமதி.ஜெயந்தி, அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.M.கபிலன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

1) அரசு தரப்பு வழக்கானது, கடந்த 2015 ல் வாதிக்கு முருகானந்தம் என்பவருடன் திருமணம் ஆகி கிஷோர் மற்றும் சன்சய் ஆகிய மகன்கள் உள்ளனர். 2018 ல் இருவருக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. 4 வருடத்திற்கு முன்பு SRM மருத்துவமனையில் வேலை செய்யும்போது மண்ணச்சநல்லூர் தாலுகா பாலையூரைச் சேர்ந்த ஜோதிவேல் மகன் எதிரி திருநாவுக்கரசு என்பவருடன் பழகி 2018 ல் சமயபுரத்தில் திருமணம் ஆகி எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரிக்கு ஏற்கனவே ரஞ்சனி என்ற பெண்ணுடன் திருமணம் ஆகி மோகித் என்ற 6 வயது குழந்தை உள்ளதாக தெரியவந்து பிறகு பெரியோர்கள் பேசி சேர்த்து வைத்ததாகவும் எதிரி டிரைவர் வேலை பார்ப்பதாகவும் கடந்த ஜனவரி மாதம் எதிரி தன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை பாலையூர் போய்விட்டு வரேன் என சொல்லிவிட்டு போனவர் வரவே இல்லை. பிறகு கடந்த 09.05.2022 ம் தேதி எதிரி இலால்குடியில் உமர் நகரில் வாதியின் சித்தப்பா வீட்டிற்கு வந்து விட்டதாகவும், பின் இரவு 10.30 மணியளவில் வாதி படுத்து இருந்தபோது எதிரி வலுகட்டாயமாக உடலுறவு கொள்ள கூப்பிட்டதாகவும் வாதி முடியாது என்று தடுத்தபோது வாதியின் நெஞ்சை பிடித்து கசக்கி ஜட்டியை பிடித்து இழுத்து எதிரி வாயை வாதியின் பெண்ணுறுப்பில் வைத்து கடித்து விட்டதாகவும், வாதி வலி தாங்காமல் அய்யோ அம்மா

என்று கத்தி தள்ளிவிட்டதாகவும், வாதியை தேவுடியா புண்டை மவளே என்று கெட்வார்த்தையால் திட்டி நீ என்ன பெரிய ஆளா உன்ன கொல்லாமல் விடமாட்டேன் என்று காலால் எட்டி உதைத்ததாகவும் அடுத்த நாள் வாதியை திருச்சி ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போறேன்னு சொல்லிவிட்டு திருச்சி அண்ணாசிலை State Bank அருகில் இறக்கிவிட்டு போனவர் திரும்பி வரவே இல்லை வாதி இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து உடல்நிலை சரியாகி டிஜ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு சென்றதகாவும் தன்னை கடித்து காயப்படுத்தி அசிங்கமாக திட்டி வாழாமல் விட்டு சென்ற கணவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வாதி அளித்த புகாரைப்பெற்று வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் என்று விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவருவதால், எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழ் இலால்குடி அனைத்து மகளிர் காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.55/2023 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b) 324, 506(1) மற்றும்

தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக்கூற எதிரி தன்னை குற்றவாளி அல்ல என்று கூறினார். எனவே அரசு தரப்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

4.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 28.05.2022ம் தேதி காவல் ஆய்வாளர் பணியில் இருந்த போது இவ்வழக்கின் புகார்தாரர் சோபனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.20/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1), 4 of TNPHW Act ன் கீழ் 16 மணிக்கு வழக்கினை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்பு வழக்கினை கடந்த 28.05.2022ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம்

சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியை கடந்த 14.11.2022 ம் தேதி கரியமாணிக்கம் பஸ்டாப் அருகில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபாகரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரியின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1), 4 of TNPHW Act ன் கீழ் கடந்த 20.11.2022 அன்று குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான குந்தவை நாச்சியார் என்பவருக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன்படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(1) மற்றும் தமிழ்நாடு

பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் 4ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதுதான்.

**<u>தீர்வு:–</u>**

7) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் வாதிட்டார். மாறாக எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் முரண்பாடாக உள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8) அரசு தரப்பு, சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில், சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 தனது புகாரில் "4 வருடத்திற்கு முன்பு SRM மருத்துவமனையில் வேலை செய்யும்போது மண்ணச்சநல்லூர் தாலுகா பாலையூரை சேர்ந்த ஜோதிவேல் மகன் திருநாவுக்கரசு என்பவர் எனக்கு பழக்கம் ஆனார். எனக்கு திருமணம் ஆகி 4 வருடத்திற்கு முன்பு விவாகரத்து ஆகிவிட்டது என தெரிந்தும் என்னை காதலித்து 4 வருடத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்டார். பின் நாங்கள் சந்தோஷமாக இருந்தோம். அவங்க குடும்பமும் என் குடும்பமும் ஒன்றாக தான் இருந்தது. கடந்த ஜனவரி மாதம் என் கணவர் தன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை பாலையூர்

போய்விட்டு வரேன் என சொல்லிவிட்டு போனவர் வரவே இல்லை. பின் 09.05.2022ம் தேதி மாலை நான் கடைக்கு போனபோது என் பிரண்ட் மானஸா போன் செய்து உங்க வீட்டுகாரர் வந்து இருக்கார் என்று சொன்னார். நான் போய் பார்த்து வா வீட்டிற்கு போகலாம் என்று கணவரை அழைத்து கொண்டு இலால்குடியில் உமர் நகரில் எனது சித்தப்பா வீட்டிற்கு வந்து விட்டோம். எனது கணவர் நல்ல படியாக இருக்க சொல்லி கண்டித்தார். பின்பு எங்கள் இருவரையும் கீழே உள்ள ரூமில் தங்க சொல்லிவிட்டு என் சித்தப்பா மாடிமேலே உள்ள ரூமில் போய் தங்கிக்கொண்டார். பின் இரவு 10.30 மணியளவில் நான் படுத்து இருந்தபோது என்னை வலுகட்டாயமாக உடலுறவு கொள்ள என் கணவர் கூப்பிட்டார் நான் முடியாது என்று தடுத்தபோது என் நெஞ்சை பிடித்து கசக்கி என் ஜட்டியை பிடித்து இழுத்து அவர் வாயை என் பெண்ணுறுப்பில் வைத்து கடித்துவிட்டார். நான் வலி தாங்காமல் அய்யோ அம்மா என்று கத்தி தள்ளிவிட்டேன். என்னை தேவுடியா புண்டை மவளே என்று கெட்டவார்த்தையால் திட்டி நீ என்ன பெரிய ஆளா உன்ன கொல்லாமல் விட மாட்டேன் என்று காலால் என்னை எட்டி உதைத்துவிட்டு படுத்து தூங்கிவிட்டார். நானும் படுத்துவிட்டேன்" என்று குறிப்பிட்டு சொல்லிவிட்டு தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று முரணாக சாட்சியமளித்துள்ளார்.

9) அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 28.05.2022ம் தேதி காவல் ஆய்வாளர் பணியில் இருந்த போது இவ்வழக்கின் புகார்தாரர் சோபனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.20/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1), 4 of TNPHW Act ன் கீழ் 16 மணிக்கு வழக்கினை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்பு வழக்கினை கடந்த 28.05.2022ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியை கடந்த 14.11.2022 ம் தேதி கரியமாணிக்கம் பஸ்டாப் அருகில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபாகரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரியின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1), 4 of TNPHW Act ன் கீழ் கடந்த 20.11.2022 அன்று குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான குந்தவை

நாச்சியார் என்பவருக்கு பதிலாக சாட்சியமளித்திருந்தாலும், வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி ஆபாச வார்த்தைகளால் தன்னை திட்டியதாகவோ, அதனால் தனக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ, எதிரி தன்னை அபாயகரமான ஆயுதத்தால் தாக்கியதாகவோ, அதனால் தனக்கு காயம் ஏற்பட்டதாகவோ, மேலும் எதிரி தன்னை மிரட்டியதாகவோ அதனால் தனக்கு பயம் ஏற்பட்டதாகவோ, எதிரி தன்னை துன்புறுத்தியதாகவோ குறிப்பிட்டு சாட்சியமளிக்காததாலும், மேலும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததாலும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு, எதிரியை குற்றவாளி என தீர்மானிக்க இயலாது.

10) ஆகவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11) எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.22 16:56:54 +0530

ஒப்பம்/-சு.அருணாச்சலம்
நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | சோபனா |
| அ.சா.2 | அஜீம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

**Judicial Form No.68**

| Sl.No of the exhibit | Description of the exhibit and its date | Date,When the exhibit was filed in the case | How marked | By Whom marked | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 20.07.26 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | புகார் வாக்குமூலம் | 20.07.26 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 20.07.26 | அ.சா.ஆ.3 | அ.சா.2 | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 20.07.26 | அ.சா.ஆ.4 | அ.சா.2 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 20.07.26 | அ.சா.ஆ.5 | அ.சா.2 | அசல் |

**சான்று பொருட்கள்:-**

இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**இல்லை

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.22 16:56:46 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**<u>குறிப்பு:–</u>**

1. வழக்கின் முடிவு காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் எதிரி குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.22 16:56:49 +0530

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

-